| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| திரு.M.இராமசாமி,<br>M.Sc., M.Phil., B.Ed.,<br>இணை இயக்குநர் (மேல்நிலை),<br>அரசுத் தேர்வுகள் இயக்ககம்,<br>சென்னை – 600 006. | அனைத்து முதன்மைக் கல்வி<br>அலுவலர்கள்மற்றும்<br>இணை இயக்குநர் (கல்வி),<br>புதுச்சேரி. |

**ந.க.எண். 086254 / எப்1 / 2019 நாள் : 27.01.2020**

**ஐயா/அம்மையீர்,**

**பொருள் :** அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6– மேல்நிலை முதலாமாண்டு பொதுத் தேர்வு, மார்ச் 2020 – பள்ளி மாணாக்கரின் பெயர்ப்பட்டியலில் திருத்தம் மேற்கொள்ளுதல் – தொடர்பாக.

**பார்வை :** இவ்வலுவலக இதே எண்ணிட்டக் கடிதம், நாள். 24.01.2020

-----

பார்வையில் காணும் கடிதத்தில், நடைபெறவுள்ள மார்ச் 2020, மேல்நிலை முதலாமாண்டு பொதுத்தேர்வு தொடர்பான பள்ளி மாணாக்கரின் பெயர்ப்பட்டியலை மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் **27.01.2020 முதல்** **www.dge.tn.gov.in** என்ற இணையதளத்திற்குச் சென்று பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டுமென தெரிவிக்கப்பட்டது.

அதன்பேரில் பதிவிறக்கம் செய்யப்பட்ட பெயர்ப்பட்டியலில் மாணாக்கர் பெயர் ஏதும் விடுபட்டிருப்பின் அதன் விவரத்தினையும், பாடத்தொகுப்பு மற்றும் மொழிப்பாடம் ஆகியவற்றில் திருத்தம் இருப்பின் அதன் விவரத்தினையும் முதன்மைக் கல்வி அலுவலரின் பரிந்துரையுடன் **31.01.2020–க்குள்** இவ்வலுவலகத்தில் நேரில் வந்து ஒப்படைக்க வேண்டும் எனவும், **மாணாக்கரின் பெயர், பிறந்த தேதி உள்ளிட்ட விவரங்களில் ஏதேனும் திருத்தங்கள் இருப்பின், அத்திருத்தங்களை மேற்கொள்ள தேர்வுகள் முடிவடைந்த பின்னர் வாய்ப்பு வழங்கப்படும்** எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**31.01.2020–க்கு பிறகு மாணவர் பெயர் சேர்த்தல் பாடத்தொகுப்பு மற்றும் மொழிப்பாடத்தில் திருத்தம் கோரி பெறப்படும் கோரிக்கை எக்காரணத்தைக் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.**

ஒம்/–

**இணை இயக்குநர் (மேல்நிலை)**

**நகல் :**

1. அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்.
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்